# கல்வியில் கலை:
## ஓர் அறிமுகம்

முனைவர் வி.அருள்நாதன்

# கல்வியில் கலை (BTMB3052)

- இப்பாடமானது கல்வியில் கலை, சிறுவரும் கலையும், புலன்களும் கலையும் ஆகியவற்றைப் பற்றிய அறிவினை அறிமுகப்படுத்துகின்றது.
- மேலும், இராகம், வண்ணம், வெளி தொடர்பான ஆக்கத்திறன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறைகளையும் விளக்குகின்றது.
- இப்பாடமானது கல்வியில் கலை தொடர்பான அறிவையும்  பயன்படுத்தி அனைத்து பாடங்களிலும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை அகழ்ந்தாய்ந்து உய்த்துணர்ந்து வெளிப்படுத்துவதற்கான அடிப்படை அறிவினையும் கொடுக்கின்றது.

# இப்பாடத்தின் நோக்கம்:

- கலாச்சாரத்தைப் பற்றிய விழிப்புணர்வு, உயர்ந்த முருகியல் உணர்வு, கற்பனைத்திறம், நுண்ணாய்வு, ஆக்கம், புத்தாக்கம் ஆகிய ஆளுமைமிக்கத் தலைமுறையினரை உருவாக்குதல் ஆகும்,

# இப்பாடத்தின் உள்ளடக்கம்:

- தேசிய கல்விக் கோட்பாட்டிற்கு ஏற்ப மாணவர்கள் இறைவன்பால் நன்றியறிதலை அதிகப்படுத்தவும், இயற்கை அழகினையும், இனங்களின் கலை கலாச்சாரங்களையும் உய்த்துணரவும், சுய, குடும்ப, சமூக, நாடு ஆகியவற்றின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்பவர்களாக உருவாக்க உதவுகின்றது.

# கல்வியில் கலை: நோக்கம்

- தேசியக் கலைத்திட்டத்தின் நோக்கத்திகேற்ப நடவடிக்கைகளை மாற்றியமைத்து கல்வியில் கலையைப் பாடங்களில் ஒருங்கிணைப்பதன் மூலம் மகிழ்வுமிக்க, ஒருங்கிணைந்த, முழுமைமிகு கற்றலை உருவாக்குதல்
- அறிவு, ஆக்கத்திறன், புத்தாக்கம், காட்சிக்கலை, இசைக் கலை, அசைவு ஆகியவற்றைக் கற்றல் கற்பித்தலில் அமல்படுத்தி உயர்நிலைச் சிந்தனைக்கு வழிகோலும் திறனை வளப்படுத்துதல்

- இயற்கையை உண்மையுணர்ந்து பாராட்டுவதன் மூலம் கூர்ந்து கவனித்தல், புலனுணர்வு, உணர்ச்சி வெளிப்பாடு ஆகிய பண்பட்டினை வளர்த்தல்
- பல்வகையான திறன்கள், உத்திமுறைகள், ஊடகங்கள், தொழிற்நுட்பங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கலையின் வழி உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல்
- உருவாக்கிய கலையைப் பற்றிய வர்ணனை (விவரிப்பு), பகுத்தாய்தல், விளக்கம், மதிப்பீடு ஆகியவற்றைச் செய்தல்
- காட்சிக்கலை, இசைக் கலை, அசைவு ஆகிய துறைகளின் வளர்ச்சிக்குப் பங்களித்தவர்களை நினைவு கூறுதல்

- ஆசிரியர் பணியின் முதுகெலும்பாக கல்வியில் கலையை உருவாக்குதல்
- சுற்றுப்புற சூழலில் கலைச் சூழலைப் பற்றிய விழிப்புணர்வும் அதனைப் போற்றுதலும் தொடர்ந்து சுகமான வாழ்விற்கான தொடர்பும்
- இனம் நாடு ஆகியவற்றின் உருவாக்கத்திற்கான தனித்துவத்தைக் கட்டியெழுப்புதல்
- காட்சிக்கலை, இசைக்கலை, அசைவு ஆகியவற்றின் வழி நன்னெறி கோட்பாடுகளை வளர்த்து அமல்படுத்துதல்